
# மயில்






உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com

# மயில்

அழகில் சிறந்த பறவை?
நடனத்தில் புகழ் பெற்ற பறவை?
நமது நாட்டின் தேசியப் பறவை எது?
என்ற கேள்விகளுக்குப் பதில் மயில் ஆகும். இத்தகைய மயில்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.



மயில்கள் பொதுவாக வெப்பமண்டல நாடுகள் மற்றும் ஈரப்பதமான பகுதிகளில் காணப்படும். மயில்கள், நீலமயில், பச்சைமயில், காங்கோ மயில் என வகைப்படுத்தப் படுகின்றன.

நீல மயில்கள் இந்திய மயில்கள் என அழைக்கப்படுகின்றன. ஏனெனில் இம்மயில் இந்தியாவில் அதிகம் காணப்படுவதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. இம்மயில்கள் இந்தியாவைத் தவிர இலங்கை மற்றும் பாகிஸ்தானின் சில பகுதிகளிலும் காணப்படுகின்றன.

மயில்களில் ஆண், பெண் என இரு பாலினம் உண்டு. இந்தியமயில்கள் "பாசியானிடே" (phasianidae) என்னும் பறவைக் குடும்பத்தைச் சார்ந்ததாகும்.

இனம் :- "பேவோ கிறிஸ்ட்டாட்டஸ்" (pavo cristatus) ஆகும்.


இந்தியமயில்கள் நீல நிறமுடையதாகவும் சில சமயம் நீலம் கலந்த பச்சை நிறத்திலும் காணப்படும். பச்சை மயில்கள் பர்மா மற்றும் தெற்காசிய நாடுகளில் காணப்படுகின்றன.


இந்தப்பச்சை நிற மயில்கள் "பாசியானிடே" (phasianidae) என்ற குடும்பத்தைச் சார்ந்தது. இதன் வகை " பேவோ மியூட்டிக்கஸ்" (pavo mutics) ஆகும். பச்சை மயில்கள் இந்திய மயில்களைப் போல் உருவமைப்பு கொண்டு இருந்தாலும் சில வேறுபாடுகள் இருக்கின்றன. காங்கோ மயில், இம் மயில்கள் காங்கோ நாட்டில் வாழ்வதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. இவற்றின் குடும்பம் "பாசியானிடே" (Phasianidae). வகை "ஆப்பிரிக்க பேவோ" (Afropavo) ஆகும்.

## இந்திய மயில்:

இந்திய ஆண் மயிலுக்குத் தோகை நீண்டும், பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும். பெண் மயிலுக்குத் தோகை கிடையாது. மயில்களுக்குத் தலையில் அழகிய கொண்டை இருக்கும், அவற்றின் கழுத்து நீண்டும் நீல நிறத்திலும் இருக்கும். மயில்கள் கூட்டமாக வாழும் பறவை. ஒரு கூட்டத்தில் ஒரு ஆண் மயிலும் நான்கு, ஐந்து பெண் மயில்களும் இருக்கும்.


மயில்கள் இரவு நேரங்களில் உயரமான மரங்களில் ஒய்வு எடுக்கும். ஏனெனில் தரையில் வேட்டை விலங்குகளிடமிருந்து தற்காத்துக் கொள்ளவும், மேலும் ஆண் மயிலின் தோகை மிகவும் கனமாக இருக்கும் காரணத்தினால் மரக்கிளையில் தோகையைச் சாய்த்துத் தூங்குவதற்கும் உயரமான இடங்களை நாடுகின்றன. தோகையின் நீளம் அதிகம். எனவே அதிக தூரம் பறப்பதில்லை.






ஆண் மயில் பறக்க முயற்சிப்பது விமானம் எழுவது போன்று இருக்கும். ஆண் மயிலின் தோகை வானவில் நிறத்தில் காணப்படும். பெண் மயில்கள் வாழ்விடம் மரங்கள் மற்றும் ஆள் நடமாட்டம் இல்லாத புதர்கள் நிறைந்த பகுதிகளாகும். மேலும் மயில்கள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் வழக்கமுள்ளவை. இம்மயில்கள் புதர்களின் நடுவில் சற்று பள்ளம் தோண்டி அருகில் உள்ள சருகுகளைச் சேர்த்து கூடு கட்டும். கூட்டில் நான்கு முதல் ஆறு முட்டைகளை இடும். இம் முட்டைகள் இளம் மஞ்சள் நிறமுடையவை, பெண் மயில் முட்டையை சுமார் இருபத்தெட்டு நாள்கள் அடைகாக்கும்.









புதிதாகப்பிறந்த குஞ்சுகள் ஒரு மணி நேரத்தில் நடக்க ஆரம்பிக்கும். ஒன்பது நாள்களுக்கு பிறகு பறக்கத் தொடங்கி விடும். குஞ்சுகளுக்கு எட்டு மாதம் ஆகும் வரை தாய் மயிலுடன் இருக்கும். அதன் பிறகு ஆண்மயிலுக்குத் தோகை முழுமையாக வளர நான்கு ஆண்டுகள் ஆகும். இவற்றின் ஆயுட் காலம் இருபது ஆண்டுகள் (20 years) ஆகும்.

இந்திய மயில்கள் நீல நிறத்தில் தலையில் அழகிய கொண்டையுடன் காணப்படும். மேலும் கண்ணின் கீழ் பகுதியில் வெண்மையான திட்டு, புருவம் போல் காணப்படுகிறது.

ஆண்மயில் உருவத்தில் பெரியது. இதன் தோகைகளின் எண்ணிக்கை சுமார் 200 இருக்கும். ஆண்மயிலுக்குத் தோகை அழகாக இருக்கும். நன்கு வளர்ந்த ஆண்மயிலின் தோகையில் கண்கள் போன்ற அமைப்பு இருக்கும். ஆண்மயில்களின் எடை 4 முதல் 6 கிலோ வரை இருக்கும். ஆண் மயிலின் நீளமான தோகை அதன் உடல் நீளத்தில் 60 (160 செ.மீ.) சதவிகிதம் ஆகும்.






ஆண் மயில், மழைக் காலங்களிலும், மே மாத கடைசியிலும் இறகுகளை உதிர்க்கும். டிசம்பர் மாதத்திற்குள் இறகுகள் மறுபடியும் வளர்ந்து விடும்.

பெண்மயில் பழுப்பு நிற மேலுடலும், கழுத்திற்குக் கீழே வெள்ளை நிற வயிற்றுப் பகுதியும் கொண்டது. பெண் மயில் உருவில் சிறியது. பெண் மயிலின் எடை 3 முதல் 4 கிலோ வரை இருக்கும். மயில்களின் தலையில் உள்ள கொண்டையின் நீளம் 1.5 செ.மீ. ஆகும்.

மயில்கள் “மே..யாவ் மே..யாவ்” என ஓசை எழுப்பும். இவ்வோசையைக் கேட்பவரின் மனநிலையைப் பொருத்து மாறுபடும். சிலருக்கு அது எரிச்சலான ஓசையாகவும், சிலருக்கு அது குயிலிசை போன்றும் உணரப்படுகிறது.



மயில்கள் பலவிதமான ஒலியை எழுப்பும். அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் எழுப்பும் ஒலி ஒருவிதமாகவும், மழைக் காலங்களில் ஒரு விதமாகவும், ஆபத்தான விலங்குகள் வரும் போது எழுப்பும் ஒலி ஒரு விதமாகவும் இருக்கும்.




மயில்கள் தாவரங்கள் மற்றும் மாமிச உணவை உண்பவை. தாவர உணவு என்பது பழங்கள், விதைகள், கிழங்குகள், இலைகள், மற்றும் தேன் போன்றவற்றை உண்ணும். மாமிச உணவாக பூச்சிகள், தவளைகள், கரையான்களை உட்கொள்ளும்.

மயில் பாம்பினை உணவாக உட்கொள்ளுமா? என்ற கேள்வி நமக்கு எழும், இது முற்றிலும் தவறான கருத்து. பாம்பு மயில்களின் முட்டையை அழித்து விடும், எனவே அவற்றைக் கண்டவுடன் மயில்கள் தாக்கி அழித்துவிடுகின்றன. இவற்றின் எதிரிகள் பூனைகள், நாய், புலி, நடுத்தரவயது பாலூட்டிகள் ஆகும்.



மயில்களின் வாழ்விடங்கள் நீர் மற்றும் உணவு சார்ந்து அமைகின்றன. இவை 1. 800 மீட்டர்கள் (1.1 மையில்) அல்லது 2000 மீட்டர் (1.2 மையில்) பரப்பளவில் வாழ்கின்றன. தற்போது மயில்களின் வாழ்விடங்கள் சுருங்கி வருவதற்கான காரணம்? மனிதர்களின் இருப்பிடத் தேவை நாளுக்கு நாள் பெருகி காடுகளை அழிப்பதேயாகும்.

எனவே மயில்கள் விளைநிலங்களை நோக்கி நகர்ந்தன. ஆரம்பத்தில் மயிலின் அழகைக் கண்டு ரசித்த மக்கள் பின்பு அவற்றை வெறுக்கத் தொடங்கினார்கள். ஏனெனில் அவற்றுக்குத் தேவையான உணவு விளைநிலங்களில் கிடைத்த போது அவை பெருகத் தொடங்கி பயிர்களை அழிக்கத் தொடங்கின.



இதனால் விவசாயிகள் மயில்களை அழிக்க ஆரம்பித்தனர். மயில்களின் மாமிசம் சில சமயம் உணவாகப் பயன்படுத்தப்பட்டன.

மயிலின் இறகுகளில் இருந்து விசிறிகள் மற்றும் அலங்காரப் பொருள்கள் தயாரிக்கின்றனர். இதன் காரணமாகவும் மயில்கள் கொல்லப்படுகின்றன. மயில்களைக் கொல்வது குற்றமாகும். மயில் நம் நாட்டின் தேசியப்பறவை, எனவே இந்திய அரசாங்கம் 1972 ஆம் ஆண்டு வனஉயிரின பாதுகாப்புச் சட்டம் இயற்றி மயில்களை வேட்டையாடுவதைத் தடை செய்துள்ளது.



பண்டைய தமிழ் வணிகத்தில் மயில் தோகைகள் ஏற்றுமதிப் பொருளாக இருந்தன. மயில்களின் தோகைகளை “சாலமோன்” மன்னனுக்கு அனுப்பியதாகவும், அங்கு மயில்களின் தோகைகள் பொன்னுக்கு நிகராக மதிக்கப்பட்டது என்றும், மாவீரன் அலெக்சாண்டர் இந்தியாவில் இருந்து மயில்களைத் தன் நாட்டிற்கு கொண்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

பண்டைய தமிழர்கள் தங்களுடைய செப்பு நாணயத்தில் மயில்களின் உருவம் பொறித்தனர். ஆற்காடு நவாப், சந்த சாயுபு போன்ற முகமதிய மன்னர்களும், விஜயரகு நாத நாயக்கர் ஆட்சியிலும் மயிலின் உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் புழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.





மயில் ஆடும் போது மயிலின் அசைவில் ஒருக்களித்தல், குதித்தல், சுற்றுதல் என்கிற மூன்று அடைவுகளை நிகழ்த்தும். அந்த அடைவுகளிலிருந்து மயில் ஆட்டம் என்கிற கலையும் தோன்றியது.

தமிழகத்தில் மயில்களின் சரணாலயம் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் உள்ளது. இந்தியாவின் தேசியப் பறவையாக மயில் 1963 இல் அறிவிக்கப்பட்டது.

## வெள்ளை மயில்:

வெள்ளை நிற மயில் என்று தனி இனம் கிடையாது. மயில்கள் வெள்ளை நிறமாகக் காணப்படுவதற்கு உடலில் உற்பத்தியாகும் மெலனின் நிறமிகளின் குறைபாடே காரணமாகும். மரபணுகுறைபாடுள்ள இந்த நோயை ‘அல்பினிசம்’ அல்லது ‘அல்பினோ’ என்கிற மருத்துவ பெயர் கொண்டு அழைக்கின்றனர். மயில்களின் உடலில் மெலனின் உற்பத்தி குறைவதினால் இது ஏற்படலாம் அல்லது இன்னும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படாத வேறு சில காரணங்களாகக் கூட இருக்கலாம். இந்த நிற குறைபாடு இந்தியா மற்றும் மியான்மர் மயில்களிடையே உள்ளது.



## பச்சைமயில்:



பச்சை நிற மயில்கள் மியான்மர் மற்றும் ஜாவா தீவுகளிலும் காணப்படுகின்றன. மயிலின் கண் செம்பு நிறத்திலும், அதன் காதருகே ஒரு மஞ்சள் பிறை போன்றும், அதன் கழுத்துப் பகுதியில் உள்ள பச்சை இறகுகள் வெளிர்நிறத்திலும் இருக்கும். இதன் கொண்டை ஒழுங்கற்றதாகவும் இருக்கும். பெண்மயில்கள் ஆண் மயிலின் சாயலை ஒத்து இருக்கும். இதன் கழுத்துப் பகுதி செதில்கள் போன்று செம்பு நிறத்திலும் காணப்படும்.

பச்சை நிற ஆண் மயிலின் நீளம் 3 மீ இருக்கும். அதன் எடை 5 கிலோ. பெண் மயில் 1.1 மீ நீளமும் சுமார் 1.1 கிலோ எடை இருக்கும். இந்திய மயில்களைப் போல இவையும் கூடு கட்டி வாழும். பச்சை நிறமயில் மியான்மர் நாட்டின் தேசியப் பறவை ஆகும்.

## காங்கோ மயில்கள் :



இம் மயில்கள் காங்கோ நாட்டில் காணப்படுகின்றன. பிற மயில்களைப் போல இவற்றுக்கு நீளமான தோகை கிடையாது. ஆணும் பெண்ணும் ஜோடி சேர்ந்தால் இறுதி வரைப் பிரியாது. இந்திய மயில்களைப் போல இவையும் கூடு கட்டி வாழும். இம் மயிலின் குஞ்சுகள் முட்டையில் இருந்து வெளி வந்த 5 நாட்களில் பறக்கத் தொடங்கி விடுகின்றன.

முட்டையில் இருந்து வெளி வந்த இரண்டு ஆண்டுகளில் ஆண், பெண் வேறுபாடு தெரியாது. மூன்றாவது ஆண்டில் தான் அழகிய தோகை முளைக்கும். நன்கு வளர்ந்த ஆண்மயிலின் தோகை 2 - 2.5 மீட்டர் இருக்கும். பெண் மயிலுக்குத் தோகை கிடையாது. ஆண் மயில் 70 செ.மீ. நீளமானது. இவற்றின் உடல்களில் நீலம் மற்றும் ஊதா நிற உலோகப் பூச்சு கலந்து உள்ளது. அவற்றின் கழுத்து இளஞ்சிவப்பாகவும், வால்பகுதி பதினான்கு கறுப்பு நிறமாகவும் ஒரு நீண்ட வெள்ளை இறகு முகடும் காணப்படும்.

பெண் மயிலின் வயிற்றுப் பகுதி கறுப்பு நிறத்திலும், முதுகுப் பகுதி குறுகிய உலோகப் பச்சை மற்றும் பழுப்பு நிறமாகவும் இருக்கும்.

# மயில்களின் வேறுபெயர்கள்

## ஆண்மயில்:

மயூரம், ஞமலி, மஞ்ஞை, பீலி, சேவல், சிகி, சிகாவளம், சிகண்டி, ஓகரம், பிணிமுகம், கலாபி, நவிரம், கேகயம் ஆகியவை ஆண் மயிலைக் குறிக்கும் சொற்களாகும்.


## பெண்மயில்:

‘அளகு’ என்பது பெண் மயிலின் வேறு பெயராகும்.

## மயில்களின் ஒலி:

மயில்களின் ஒலி அகவல், ஆவல், ஏங்கல் என்று வரையறுக்கப்படுகிறது.

## மயில் தோகையின் பெயர்:



சரணம், சிகண்டம், சந்திரகம், கலாபம், கூழை, தொங்கல், தூவி ஆகியவை மயில் தோகையின் வேறு பெயர்களாகும்.

## இறகின் முள் பெயர் :

மயில் இறகின் வெள்ளை நிறத்தில் இருக்கும் அடிப் பகுதிக்கு முருந்து என்று பெயர்.

சிறியோர் முதல் பெரியோர் வரை காண காண மகிழ்ச்சியைத் தருவது மயில்கள். அத்தகைய மயில்கள் இன்று அருகி வருகின்ற இனமாக மாறுகின்றன. இதற்குக் காரணம் மனிதர்களாகிய நாம் அவற்றின் உணவுகளை நஞ்சாக்கி, அவற்றின் வாழ்விடங்களை அழித்து அவற்றை மிருகக்காட்சிச்சாலையில் அடைத்து விட்டோம். இனி வருகின்ற தலை முறைகள், மயில்களை அதன் இயற்கை சூழ்நிலையில் கண்டு, வாழவைப்போம் என்று உறுதி கொள்வோம்.

***



இதுவரை மயிலின் வாழ்வியலையும்,
அழகியலையும் படித்து சுவைத்த நீங்கள் இனி பார்க்க இருக்கும் விலங்கு
மயிலின் எதிரி, தந்திரத்தின் தலையாரி? சொல்லும் போதே
நரி என்று உங்கள் சிந்தனை சொல்லியிருக்கும்.

*நரிகள் நாய்பேரினத்தைச் சார்ந்த விலங்காகும்.*
*நரிகள் காலத்திற்கு ஏற்ப நிறம்மாறும் என்பதை*
*நீங்கள் அறிவீர்களா?*

**காத்திருங்கள்**
**அடுத்த நூலில் சந்திப்போம்.**




செ.மெல்வின்ராஜா., M.A.,M.Phil.,B.Ed.,
[மொழி ஆய்வாளர்]

உடன் உலகத்தமிழ்க் கல்விக்கழக தமிழ் ஆசிரியர்கள்
மற்றும் வரைகலையாளர்கள்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com